# GSMII/26

Don't write anything in this space

| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II) க்கான முதன்மைத் தேர்வு |
| Examination | : | Combined Civil Services Examination-II [Group-II Services] Main Examination |
| பாடம் | : | பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – II] (விரிந்துரைக்கும் வகை) |
| Subject | : | General Studies (Degree Standard) [Paper - II] (Descriptive Type) |
| தேர்வு நாள் | : | 22.02.2026 மு.ப. |
| Date of Examination | : | 22.02.2026 F.N. |

TNPSC - SPECIMEN

Do not use this area

Booklet Serial No. ____________

Don't write anything in this space



| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II) க்கான முதன்மைத் தேர்வு |
| Examination | : | Combined Civil Services Examination-II [Group-II Services] Main Examination |
| பாடம் | : | பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – II] (விரிந்துரைக்கும் வகை) |
| Subject | : | General Studies (Degree Standard) [Paper - II] (Descriptive Type) |
| தேர்வு நாள் | : | 22.02.2026 மு.ப. |
| Date of Examination | : | 22.02.2026 F.N. |



Register No. ____________

Signature of the candidate with date.

**Certificate**

I have issued this Question-cum-Answer booklet to this candidate after verifying his / her Register Number., photo and signature in the hall ticket.

Signature of the Room Invigilator with date.

**Certificate**

(To be signed after the completion of the examination.)

I have struck out all the unanswered blank spaces in the Question-cum-Answer Booklet by using black ink pen (Fountain Pen or Ball point pen or Gel pen) which I have used for writing this examination.

Signature of the candidate with date.

TNPSC - SPECIMEN
Do not use this area

# தாள் – II / PAPER – II

# பொது அறிவு / GENERAL STUDIES

## விரிந்துரைக்கும் வகை / Descriptive Type

## பட்டப்படிப்புத் தரம் / Degree Standard

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 300

Duration : 3 Hours | Total Marks : 300

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 80 பக்கங்களைக் கொண்டுள்ளது)

(This question-cum answer booklet consists of 80 pages)

**அறிவுரைகள் / Instructions**

**(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)**

**(Candidates shall comply with the following instructions)**

1. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 80 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

   Candidate shall first ensure that this question-cum-answer booklet contains 80 pages. If any defect is noticed in the question-cum-answer booklet, it shall be reported to the room invigilator before the commencement of the examination and candidate must get it replaced with another complete question cum answer booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.

2. (i) தேர்வர் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   Candidate have to answer each question in the question-cum-answer booklet, only in the space provided for that question. They candidate should not write anything outside the space provided.

   (ii) தேர்வர் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும், அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

   Candidate should strike out the unused blank spaces of the answered questions and blank spaces of unanswered question with the permitted black colour ink pen without fail. The candidate should not sign in the spaces struck out.

TNPSC - SPECIMEN

3. தேர்வர் வினா எண்ணிற்கான உட்பிரிவு எண்ணை நேர்விற்கேற்ப குறிப்பிட வேண்டிய இடங்களில் குறிப்பிடுதல் வேண்டும்.

Candidate should mention the sub division numbers for the questions wherever necessary.

4. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

Candidate should answer the number of questions as instructed in the question cum answer booklet in each section. If more than the required number of questions are answered, the excess questions answered at the end of each section will not be taken into account.

5. தேர்வர் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

Candidate should not tear off any leaves from this question-cum-answer booklet.

6. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

No separate marks will be awarded for neatness of writing and correctness of spelling in respect of this examination.

7. இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ளவையே இறுதியானவை.

In this question-cum-answer booklet, questions are in Tamil and English versions. In all matters, English version is final.

8. **கீழ்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**

**The Answer Booklets will be invalidated if the following errors are found :**

(i) வினா விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch Pens, Pencil, வண்ணப் பென்சில்கள், வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.

Usage of colour pens (Whitener, Sketch pens, pencil, colour pencils, colour pens, crayons, etc.,) other than black ink pens in the Question Cum Answer Booklet.

(ii) தேர்வர், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.

If a Candidate writes their Register Number anywhere in this question-cum-answer booklet.

TNPSC - SPECIMEN

(iii) வினா விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் மற்றும் முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.

Writing name and details, writing religious symbols, Candidates name, signature, phone number, mobile number, any other names, initials and address, irrelevantly anywhere in the question-cum-answer booklet.

(iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

Appealing to the examiner in the answer booklet, invoking sympathy of examiners in connection with their results.

(v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்விற்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

Candidates writing anything unconnected to the question or the examination, or any impertinent remarks and irrelevant matter revealing his / her identity.

(vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம், மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.

Writing the answers in more than one language (i.e., partly in Tamil and partly in English) except in cases where specifically permitted. However, technical words which cannot be translated, can be written in the respective languages, i.e., only the technical words and not the entire sentence / entire answers.

(vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.
Wrongly seated in the place of other candidates and/or using the answer booklet of other candidates.

(viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.

Tampering with the Barcode printed on the question-cum-answer booklet.

(ix) வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

The question-cum-answer booklet for Main Examination which has not been signed by the candidates in the two designated places in the first page.



TNPSC - SPECIMEN

## பகுதி — அ

## PART — A

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

***Note :*** Answer **all** the questions.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 100 words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்**.

Each question carries **ten marks**.

**(9 × 10 = 90)**

| | |
|---|---|
| Q.No. 1 | தமிழ் மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்ததில் சத்தியமூர்த்தி, N.S. கிருஷ்ணன் மற்றும் K.P. சுந்தராம்பாள் ஆகிய நடிகர்களின் பங்களிப்பு பற்றி தனித்தனியாகக் குறிப்பிடுக.<br><br>Enumerate the role of notable film artists, Sathyamurthy, N.S. Krishnan and K.P. Sundarambal in spreading nationalism among Tamil People. |

TNPSC - SPECIMEN

| | |
|---|---|
| Q.No. 2 | மிஷன் சக்தியின் சம்பல் துணைத் திட்டத்தின் கூறுகளை விரிவுபடுத்துக.<br><br>Elaborate the components of Sambal Sub-scheme of Mission Shakti. |

| | |
|---|---|
| Q.No. 3 | நகர்ப்புற ஏழைகளின் நலனுக்கான இந்திய அரசின் நகர்ப்புற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் திட்டங்களை விவரிக்க.<br><br>Elucidate the schemes launched for urban poor by Ministry of Housing and Urban Affairs of India. |

| | |
|---|---|
| Q.No. 4 | மனித செல் வரைபடத் தொகுதி (Human Cell Atlas) திட்டத்தின் முதன்மை இலக்குகள் மற்றும் சமீபத்திய முன்னேற்றங்கள் யாவை?<br><br>What are the primary goals and recent milestones of the Human Cell Atlas Project? |

| Q.No. | |
|---|---|
| Q.No. 5 | மக்களாட்சியில் பொது கருத்தை உருவாக்குவதில் ஊடகங்களின் பங்குப் பற்றி விவரிக்க.<br><br>Describe the role of media in generating Public Opinion in a democracy. |

| Q.No. | |
|---|---|
| Q.No. 6 | 2025-ம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டத்தை ஆராய்ந்து, அதற்குத் தீர்வு காண பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும்.<br><br>Investigate India's unemployment scenario in the year 2025 and suggest suitable measures to address unemployment. |

| Q.No. | |
|---|---|
| Q.No. 7 | இந்தியக் கூட்டாட்சி அமைப்பிற்கு எதிராக எழும் சவால்களை ஆராய்க.<br><br>Examine the emerging challenges to Indian Federal Structure. |

| Q.No. | |
|---|---|
| Q.No. 8 | இந்தியாவில் உணவுப் பாதுகாப்பில் விலை ஆதரவு அமைப்பின் தாக்கத்தை விளக்குக.<br><br>Explain the Impact of price support system on Food Security in India. |

| Q.No. | |
|---|---|
| Q.No. 9 | ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஸ்கர் யோஜனா (SGSY) பற்றி விளக்குக.<br><br>Discuss the 'Swaranjayanti Gram Swarozgar Yojana' (SGSY). |

TNPSC - SPECIMEN

## பகுதி — ஆ

## PART — B

தேர்வர் இந்த பகுதியில் உள்ள வினாக்களுக்கு தமிழிலோ **அல்லது** ஆங்கிலத்திலோ விடையளிக்கலாம்.

Candidate may answer the questions in this part either in Tamil **OR** in English.

***குறிப்பு :*** i) கொடுக்கப்பட்டுள்ள **ஐந்து** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***Note :*** Answer any **three** questions out of **five** questions.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 100 words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்**.

Each question carries **ten marks**.

**(3 × 10 = 30)**

| | |
|---|---|
| Q.No. 10 | பழந்தமிழரின் கலையறிவு குறித்து விளக்குக.<br>Explain the artistic knowledge of the ancient Tamils. |

| | |
|---|---|
| Q.No. 11 | பண்டைய தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை விவரித்து எழுதுக.<br>Explain the Cultural Elements of ancient Tamils. |

| | |
|---|---|
| Q.No. 12 | தனித்தமிழ் இயக்கத்தின் புகழ்வாய்ந்த அறிஞர்கள் சிலரின் பங்களிப்பினை விவரிக்க.<br>Describe the contributions of some eminent scholars of Tanittamil Iyakkam. |

| | |
|---|---|
| Q.No. 13 | திருக்குறளில் இல்லறவியல் கோட்பாடுகளை விரித்துரைக்க.<br>Explain the principles of domestic life in the Thirukkural. |

| | |
|---|---|
| Q.No. 14 | சங்க இலக்கியத்தில் இரண்டு பிரிவுகளான அகம் புறம் கூறும் நூல்களைப் பற்றி எழுதுக.<br>Discuss the poetical works which deal with the two divisions Aham and Puram in Sangam literature. |



TNPSC - SPECIMEN

## பகுதி — இ

## PART — C

*குறிப்பு :* i) இப்பகுதி ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று வினாக்கள் உள்ளன.

***Note :*** This part contains six sections and each section contains three questions.

ii) **ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மூன்று வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**In each section, answer any two questions out of three questions.**

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 200 words.

iv) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து மதிப்பெண்கள்.**

Each question carries **fifteen marks.**

**(12 × 15 = 180)**

### பிரிவு — அ

### SECTION — A

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 15 | இந்தியாவின் வளர்ச்சியில் மேற்கத்திய கல்வியின் பங்கை ஆராய்ந்து, காலனித்துவ காலம் முதல் சுதந்திரம் வரையில் அது எவ்வாறு பரிணாம வளர்ச்சியை அடைந்தது - விவரி.<br><br>Explore the role of Western Education in the development of India and trace its evolution from the colonial period till Independence. |

| | |
|---|---|
| Q.No. 16 | இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்களை பற்றி விளக்குக.<br><br>Explain the Socio-Religious reform movements of Tamil Nadu in $20^{th}$ century. |

| | |
|---|---|
| Q.No. 17 | பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆற்றிய பங்கினை மதிப்பிடுக.<br><br>Assess the role played by Periyar E.V. Ramasamy for the Women Empowerment. |

TNPSC - SPECIMEN

## பிரிவு — ஆ

## SECTION — B

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 18 | சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகத்தை (ESG) பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) விலிருந்து வேறுபடுத்தி, அதன் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக. இந்தியப் பொருளாதாரத்திற்கு இந்த விதிமுறைகள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை விவாதிக்கவும்.<br><br>Distinguish Environmental, Social and Governance (ESG) from Corporate Social Responsibility (CSR) by highlighting its significant features. Discuss why these regulations are important for the Indian Economy. |

| | |
|---|---|
| Q.No. 19 | இந்திய சூழலில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப மனித வளர்ச்சி ஏன் தோல்வியடைந்தது என்பதற்கான காரணங்களைப் பகுப்பாய்வுச் செய்க.<br><br>Analyze the reasons on why human development failed to keep pace with economic development in the Indian Context? |

| | |
|---|---|
| Q.No. 20 | உலகமயமாக்கல் நடைமுறைகளுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் மற்றும் உலகமயமாக்கல் ஏற்பட்ட பிறகு வர்த்தகம், பொருளாதாரம், வாழ்க்கை முறை மற்றும் சமூக நிலைகள் எவ்வாறு மாறின என்பவற்றை ஆராய்க.<br><br>Examine the circumstances that led to globalization practices and how trade, economy, life style and social status changed after globalization took place. |

TNPSC - SPECIMEN

## பிரிவு — இ

## SECTION — C

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 21 | குவாண்டம் கம்ப்யூட்டிங் சமூகத்திற்கு எவ்வாறு பயனளிக்கிறது? விவரிக்கவும்.<br><br>How quantum computing can benefit to the society? Explain. |

| | |
|---|---|
| Q.No. 22 | காட்டுத் தீயானது உயிரியப் பல்வகைமை, சுற்றுச்சூழல் சமநிலை மற்றும் நாடுகளின் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது – என்பதனை உலகில் ஏற்பட்ட அண்மைக்கால நிகழ்வுகளுடன் விளக்குக.<br><br>Forest fire is a major threat to Biodiversity, Ecological balance and economy of countries. Explain it briefly with the suitable examples of recent occurrences around the globe. |

| | |
|---|---|
| Q.No. 23 | (அ) மாற்று காந்தம் (alter magnets) என்றால் என்ன?<br>(ஆ) மாற்று காந்தம், மின்னணு சாதனத்தின் வேகம் மற்றும் செயல்திறன் மற்றும் சேமிப்பை எவ்வாறு மேம்படுத்துகிறது?<br>(a) What is alter magnets? (3)<br>(b) How can alter magnets improve the speed and efficiency of electronic device and storage? (12) |

## பிரிவு — ஈ

## SECTION — D

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 24 | இந்திய அரசமைப்பின் ஆறாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பழங்குடியினர் பகுதிகளின் நிர்வாகம் தொடர்பான சிறப்பு அம்சங்களை ஆராய்ந்து, ஆறாவது அட்டவணையில் லடாக் சேர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை மதிப்பிடுக.<br><br>Analyze the special provisions related to administration of tribal areas enshrined in the Sixth Schedule of the Indian Constitution and examine the need for inclusion of Ladakh in the Sixth Schedule. |

TNPSC - SPECIMEN

| | |
|---|---|
| Q.No.<br>25 | இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரிகளை நிர்வகிப்பது மற்றும் செயல்படுத்துவதில் ஒன்றிய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையேயான சவால்கள் மற்றும் முரண்பாடுகள் குறித்து ஆராய்க.<br><br>Examine the key challenges and conflicts between the Union Government and State Governments regarding the implementation and management of the Goods and Services Tax (GST) in India? |

| | |
|---|---|
| Q.No.<br>26 | நவீன ஜனநாயகத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருவதில் மத்தியத் தகவல் ஆணையத்தின் பங்குகளை விவரிக்கவும்.<br><br>Describe the role of Central Information Commission in bringing about transparency in Modern Democracy. |

## பிரிவு — உ

## SECTION — E

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No.<br>27 | 2024ல் தென்னிந்தியாவில் வெப்பமண்டலச் சூறாவளிகளின் சமூகப் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்க.<br><br>Analyze the Socio-Economic and Environmental Impacts of Tropical cyclones in South India during 2024. |

| | |
|---|---|
| Q.No.<br>28 | பனிப்பாறைகள் உருகுவதால் இமயமலைப் பகுதியில் உள்ள உயிரியப் பல்வகைமைக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் பாதிப்பைப் பகுப்பாய்வு செய்க. உருகும் நிலையில் உள்ள பனிப்பாறைகளைப் பாதுகாக்க என்ன வழிமுறைகளை மேற்கொள்ளலாம்?<br><br>Analyse the impact of Glacier retreat on biodiversity and ecosystem services in the Himalayan region. What conservation strategies can be adopted to protect fragile mountain ecosystems? |

| | |
|---|---|
| Q.No.<br>29 | தமிழகத்தில் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றி விவாதிக்கவும். மேலும் வெள்ளம், சூறாவளி மற்றும் ஆழிப்பேரலையால் மனிதர்கள் எதிர் கொள்ளும் இடர்களைத் தடுக்கவும், குறைக்கவும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்?<br><br>Discuss the causes of flood in Tamil Nadu. What steps can be taken to prevent and mitigate human suffering due to floods, cyclones and tsunami? |

TNPSC - SPECIMEN

பிரிவு — ஊ

**SECTION — F**

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 30 | தமிழ்நாட்டில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் நோக்கம் மற்றும் நன்மைகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.<br><br>Briefly note on scope and advantages of Chief Minister's Girl Child Protection Scheme in Tamil Nadu. |

| | |
|---|---|
| Q.No. 31 | எரிசக்தித் துறை தொடர்பான தமிழ்நாட்டின் 2025-26 நிதிக் கொள்கையில் ஏற்பட்ட முக்கியமான மாற்றத்தை விளக்குக.<br><br>Illustrate the strategic shift in Tamil Nadu's 2025-26 fiscal policy regarding the energy sector. |

| | |
|---|---|
| Q.No. 32 | இந்தியாவில் தொழிலாளர்களுக்காக செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஒரு குறிப்பு எழுதுக.<br><br>Write a note on social security measures implemented for labourers in India. |

TNPSC - SPECIMEN